FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8323726

1. District : மாவட்டம் **Tenkasi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti Corruption** Year: ஆண்டு **2026** FIR No.: முத.அ. எண் **15/2026** Date: நாள் **03.11.2026**

2. (i) Act சட்டம்: **PC Act, 1988 as amended in Act 16 of 2018.** Sections பிரிவுகள்: **7(b)**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **02.11.2026 13.45 hrs** Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **03.11.2026** Time : நேரம் **09.30 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **03.11.2026** Time : நேரம் **09.30 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **Written**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **Venkadampatti-II VAO office. 25 Km South East**

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **P.THAMOTHARAN** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **Tr.PAULDURAI**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **15.04.1980** (d) Nationality : நாட்டினம் **INDIAN** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் **GROCERY SHOP OWNER** (g) Address : முகவரி **8/22A, ARUMUGAMPATTI STREET, LAXMIYUR, ALANGULAM TALUK, TENKASI DISTRICT.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Chairma Pandian, Village Administrative Officer, Vekadampatti Part-II Village, Alangulam Taluk, Tenkasi District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவைபெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவைபெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 03.11.2026ம் தேதி காலை 09.30 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் M.பால் சுதர் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது ஆலங்குளம் தாலுகா லெட்சுமியூர் கதவு எண்.8/22A, ஆறுமுகம்பட்டி தெருவில் குடியிருந்து வரும் திரு.பால்துரை மகன் திரு.தாமோதரன் என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, ரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட வெங்கடாம்பட்டி பகுதி-II கிராம நிர்வாக அலுவலர் திரு.சோம பாண்டியன் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்து, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 03.11.2026-ம் தேதி காலை 10.30 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.15/2026 u/s 7(b) of the PC Act 1988 as amended in Act 16 of 2018 என வழக்கு பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் P.தாமோதரன், வயது 47/26 த/பெ. பால்துரை, க.எண். 8/22A, ஆறுமுகம்பட்டி தெரு, லெட்சுமியூர், ஆலங்குளம் தாலுகா, தென்காசி மாவட்டம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Thamo Thry
3/11/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

3/11/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

3.11.2026
12.00 HRS.

Name: பெயர் M.PAUL SUTHER.
Rank: நிலை ..... No. எண் .....
DSP. VIGILANCE, Tenkasi.

பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தென்காசி மாவட்டம். ஐயா, நான் லெட்சுமியூரில் மளிகை கடை நடத்தி வருகிறேன். எனக்கு லெட்சுமியூரில் வெங்கடாம்பட்டி பகுதி-2 கிராம சர்வே என் 1254/19Bல் 2½ சென்ட் நிலம் எனது பெயரிலும், எனது தம்பி தாமரைக்கனி பெயரிலும் உள்ளது. அதில் எனக்கு சிறிய வீடும் உள்ளது. மேற்படி வீட்டின் மீது அடமான கடனுக்காக வங்கியை அணுகியபோது வீடு கூட்டுப் பட்டாவில் உள்ளது. அதனால் தனிப்பட்டா வாங்கிக் கொடுத்தால்தான் லோன் கிடைக்கும் என்று சொல்லிவிட்டார்கள். நானும் கடந்த அக்டோபர் மாதத்தில் தனிப்பட்டாவிற்கு விண்ணப்பித்தேன். அந்த மனுவை தள்ளுபடி செய்து விட்டார்கள். பின்பு நான் வெங்கடாம்பட்டி பகுதி-2 VAO திரு.சேர்ம பாண்டியன் அவர்களை நேரில் சென்று பார்த்தேன். அவர் மீண்டும் தனிப்பட்டாவிற்கு ஆன்லைனில் அப்ளை பண்ணிவிடுங்கள். நான் சர்வேயரிடம் பேசி தனிப்பட்டாவிற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். அதனால் மீண்டும் நான் ஆன்லைனில் தனிப்பட்டாவுக்கு விண்ணப்பித்து விட்டு VAO திரு.சேர்மபாண்டியன் அவர்களை எனது செல்போன் என் 8870719839ல் இருந்து அவரது செல்போன் என்.9791814218ல் தொடர்பு கொண்டு தகவல் சொன்னேன். பின்பு அவர் ஒரு வாரத்தில் சர்வேயரை கூட்டி வந்து இடத்தை அளந்தார். அப்போது VAO என்னை தனியாக அழைத்து தனிப்பட்டாவிற்கு ரூ.10,000/- செலவாகும் என்று சொன்னார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை பார்த்து செய்து குடுங்க என கேட்டேன். உடனே சரி ரூ.8,000/- குடுங்க என கேட்டார். அப்போதும் நான் கடையில் சரியான வியாபாரம் இல்லை சார் தயவு செய்து குறைத்து செஞ்சு குடுங்க என கேட்டேன். சரி உனக்காக குறைக்கிறேன் ரூ.4,000/- மாவது கண்டிப்பாக தரவேண்டும் என சொல்லிவிட்டு சென்று விட்டார். பின்பு 31.10.2026-ம் தேதி மதியம் VAO எனது செல்போனில் பேசி உனக்கு தனிப்பட்டா வந்து விட்டது. பணம் எப்போது கொண்டு வருவாய் என்று கேட்டார். நான் கடையில் இருக்கிறேன், திங்கட்கிழமை வந்து பார்க்கிறேன் என்று சொன்னேன். நேற்று 02.11.2026-ம் தேதி காலை 08.30 மணியளவில் நான் கடையில் இருந்தபோது VAO எனக்கு போன் செய்தார். நான் எடுப்பதற்குள் கட்டாகிவிட்டதால் பின்பு நான் அவரை தொடர்பு கொண்டு பேசியபோது அவர் எப்போது வருவீர்கள் என்று கேட்டார். நான் கடையில் இருக்கிறேன், பிறகு வருகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் தனிப்பட்டா வாங்கியதும் பணம் கொடுக்க மாட்டீர்களா, பணம் வரவில்லை என்றால் பட்டா ரத்து செய்துவிடுவேன் என்று சொன்னார். நானும் சரி சார், நான் நேரில் வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு நேற்று மதியம் 01.45 மணியளவில் வெங்கடாம்பட்டி பகுதி-2 VAO அலுவலகம் சென்று திரு.சேர்மபாண்டியன் அவர்களை நேரில் சந்தித்தபோது அவர் பட்டா வந்ததும் மறந்துவிட்டீர்களே, உங்களுக்காக சர்வேயரை கூட்டி வந்து இடத்தை அளந்து கொடுத்திருக்கிறேன், பணமும் ரூ.10,000/- சொல்லி ரூபாய் 8,000/- மாக குறைத்து, நீங்க வியாபாரம்

இல்லைன்னு சொன்னதால ரூ.4,000/- மாத குறைத்து சொல்லியிருக்கிறேன், அதையும் உங்களால் கொடுக்க முடியாது, உங்களுக்கு பட்டா வந்ததும் நீங்களே வந்து பணத்தை கொடுத்திருக்க வேண்டாமா, நானெல்லாம் பணம் வரலைன்னா நீங்க புதிதாக எங்கிட்ட இடத்திற்கு என்னிடம் தான் பட்டா வாங்க வரவேண்டும். அதனால நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் நாளைக்கு பணம் தருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனவே, என்னிடம் எனது பெயரில் தனிப்பட்டா வழங்கிடுவதற்கு லஞ்சமாக ரூ.4,000/- கேட்ட கொண்டாப்பட்டி பகுதி-2 VAO திரு.சேர்மபாண்டியன் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒம். 03.11.2026, P.தாமோதரன்).

Sir, Received the complaint on 03.11.2026 at 09.30 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.15/2026 u/s 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 03.11.2026 at 10.30 hrs. Sd.03.11.2026, M.Paul Suther, DSP, V&AC, Tenkasi.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை களும் முதன்மை மாவட்ட நீதிமன்றம், தென்காசி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

3/11/2026

M. PAUL SUTHER.
DSP. V&AC
Tenkasi.